**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

## DW 1- OS. No. 38/2017 C/WOS No.100/17 and OS No.98/21

2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி.சரஸ்வதி | தொழில் : |
| க/பெ. : திரு, ராமசாமி | வயது : 78 |
| முகவரி : | |

**மனு அனுமதியின் பேரில் பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி**

28.11.2016 தேதிய பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் கார்பிரேசன் வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பில் மேற்படி கணக்கிற்கான தொகையை வாதியும் செலுத்தியுள்ளதால் அதற்கான ரசீதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 25.11.2016 தேதிய வர்த்தமான கடிதம் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.(பி.த.சா 2 ன் அடிப்படையில் மேற்படி வர்த்தமான கடிதம் தயார் செய்யப்ட்டடுள்ளதாலும் ஏற்கனவே பி.த.சா 2 ஆட்சேபணையுடன் குறியீடு செய்யயப்பட்டுள்ளதாலும் வாதி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) எனது தரப்பு சாட்சியினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை**

1. என்னுடைய கணவர் பெயர் என்ன என்றால் ராமசாமி. எனக்கு ரத்தினசாமி கோவிந்தராஜ் என்று 2 மகன்களும் சுமதி ராஜேஸ்வரி என்று 2 மகள்களும் உள்ளார்கள் என்றால் ஆமாம். என்னுடைய இரண்டாவது மகன் கோவிந்தராஜ் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். என்னுடைய மகன் ரத்தினசாமி என்னுடைய கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். என்னுடைய மகன் ரத்தினசாமி பிரின்ஸ் டையிங் கம்பெனி மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. தயாநிதி யாருடைய பையன் என்றால்

என்னுடைய மகள் சுமதியின் மகன். எனக்கு மகள் வழி பேரன் என்றால் ஆமாம். என்னுடைய பேரன் தயாநிதி ரத்தினசாமி மீது ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.04.26 19:03:18 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.